**<u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>**

| O.S. No. 132/2014 | Date :26.10.2022. | DW1 |
|---|---|---|
| Name: கோசலை | W/o. மாரியப்பன் | Evidence Recorded Time: 11.18 A.M. to 11.40 A.M |

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பங்கு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களின் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில் உள்ள சங்கதிகளின் விவரங்கள் எனக்கு தெரியும். தாண்டவன் என் தகப்பனார், அமராவதி என் தாயார் ஆவார்கள். மேற்படி தாண்டவனுக்கும், அமராவதிக்கும் நான்கு ஆண் மக்கள், இரண்டு பெண் மக்கள் என்றால் சரிதான். நடசேன், மாதன், வெங்கடாஜலம், அப்பு ஆகியோர்கள் ஆண் மக்கள் என்றாலும் குழந்தையம்மாள் மற்றும் நான் பெண் மக்கள் என்றாலும் சரிதான். நடேசன் இறந்துவிட்டார் என்றாலும் அவரின் வாரிசுகள் தான் 2, 3 வாதிகளான பாப்பாத்தி மற்றும் மணிமேகலை என்றாலும் சரிதான். மாதன் திருமணம் நடைபெறாமல் இறந்துவிட்டார் என்றாலும் அவருக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்றாலும் சரிதான். வெங்கடாஜலம் இறந்துவிட்டார் என்றாலும் அவரின் வாரிசுகள் மனைவி நாகம்மாள், மகன் சிவக்குமார், மகள் கவிதா 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 4–ம் வாதி சசிக்குமார் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். குழந்தையம்மாளும் திருமணம் நடைபெறாமல் இறந்துவிட்டார் என்றால் திருமணம் ஆகிவிட்டது ஆனால் குழந்தைகள் இல்லை. அவரின் கணவர் வேறு திருமணம் செய்து கொண்டார். குழந்தையம்மாளின் கணவருக்கும் எந்தவிதமான வாரிசுகளும் இல்லை என்றால் சரிதான். அப்பு இறந்துவிட்டார் என்றாலும் அவரின் வாரிசுகள் தான் 5, 6 பிரதிவாதிகள் என்றாலும் சரிதான். சங்குபதி, வீரராஜை தவிர அப்புவிற்கு வேறு சட்டப்படியான வாரிசுகள் யாரும் இல்லை. 5, 6, 7 பிரதிவாதிகள் என்னுடைய மகன் மற்றும் மகள்கள் என்றால் சரிதான். மேற்படி சொல்லப்பட்ட நபர்களை தவிர தாண்டவனுக்கும், அமராவதிக்கும் சட்டப்படியான வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரிதான். அப்பு வகையறாவினர் எங்கள் மேல் மேட்டூர் குற்றவியல் நீதிமன்ற எண்.1–ல் குற்ற வழக்கு எண்.135/2014 என்ற வழக்கு நடைபெற்றுவருகிறது என்றால் சரிதான். அதில் நானும் என்னுடைய வாரிசுகளான 5, 6, 7 பிரதிவாதிகளும் சேர்ந்து ஒரு வழக்கறிஞர் மூலமாக வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் பதிலுரையை நானும் எனது மகன் மற்றும் மகள்களான 5, 6, 7 பிரதிவாதிகள் சேர்ந்துதான் தாக்கல் செய்துள்ளோம். நான் தற்போது எனக்கும், எனது மகன், மகள்களுக்கும் சேர்த்துதான் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கும் எனது மக்கள்களுக்கும் இடையே எந்த விதமான கருத்து வேறுபாடும் இல்லை என்றால் சரிதான். நான் எந்த வேலைக்கும்

செல்லவில்லை. எனக்கு வருமானம் எதுவும் வரவில்லை. 2001–ம் ஆண்டிற்கு பிறகு எந்த வேலைக்கும் செல்லவில்லை, எந்தவிதமான வருமானமும் இல்லை. என் கணவர் கல் உடைக்கும் வேலைக்கு செல்கிறார். எனது கணவருக்கு ஒரு மாதத்திற்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் மாதம் ரூ.5000/– தான் அதிகபட்சமாக வருகிறது. எனது மகன் மற்றும் மகள்களுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். அவர்களில் ஒரு மகளான லட்சுமி என்பவர் மட்டும் என்னுடன் வசித்து வருகிறார், மற்றவர்கள் அவர்கள் குடும்பத்தினருடன் தனியாக வசித்து வருகின்றனர். எனது பெண் மக்களுக்கு நகை, சீர் வரிசை செய்யும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை. எனக்கே நகை நட்டு இல்லை, நான் எவ்வாறு எனது மகள்களுக்கு நகை போடுவது. என் கணவரின் சம்பாத்தியம் எனது குடும்பத்தினை நடத்துவதற்கே சரியாக உள்ளது. வெளியில் கடன் வாங்கும் பழக்கம் எதுவும் எனக்கும் எனது கணவருக்கும் கிடையாது. நான் வெளியில் யாருக்கும் ரூ.ஐம்பாதாயிரம் மற்றும் ஒரு லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு பணம் இல்லை என்றால் மூன்றாம் நபருக்கு கொடுக்கவில்லை, ஐம்பதாயிரம் சசிக்குமாருக்கும், மற்றொரு ஐம்பதாயிரம் வீரராஜுவிற்கும் கொடுத்துள்ளேன். மேற்படி பணத்தை 2011–ம் ஆண்டு கொடுத்தேன். பணத்தை கொடுத்தற்கு ரசீது வைத்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பணத்தை கொடுத்த விவரத்தை என்னுடைய பதிலுரையில் சொல்லியுள்ளேன். எனக்கே வருமானம் இல்லாமல் சிரமப்பட்டு வரும் நிலையில் நான் மேற்படி நபர்களுக்கு பணம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் என் அம்மாவின் நிலத்தை விற்று பணத்தை கொடுத்தேன் என் கையிலிருந்து பணம் கொடுக்கவில்லை. என்னிடம் நிலத்தை வாங்கியவர்கள் 8 முதல் 10 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எந்த சர்வே எண்ணில் உள்ள நிலத்தை விற்று பணம் கொடுத்தேன் என்றால் சர்வே எண்.546/6–ல் 99 செண்ட் நிலத்தை விற்றேன். அதில் ரூ.18 லட்சம் பணம் வந்தது. மேற்படி ரூ.18 லட்சத்தில்தான் அவர்களுக்கு பணம் கொடுத்தேன். கிரையம் எந்த தேதியில் செய்தேன் என்றால் தேதி நினைவில்லை, 2011–ல் கிரையம் செய்து கொடுத்தேன். கிரைய பத்திரத்தில் வீரராஜ், சசிக்குமார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.